C

# முதல் பருவத்தேர்வு – 2024
# தொகுத்தறி மதிப்பீடு – தமிழ்

**வகுப்பு : 6** **மதிப்பெண்கள் : 60**
**காலம் : 2.00 மணி**

## பகுதி – I
( மதிப்பெண்கள் : 8)

சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. 8 × 1 = 8

| வினா எண் | விடைக் குறியீடு | விடைக் குறிப்புகள் | மதிப்பெண் |
|---|---|---|---|
| 1 | ஆ | ஔடதம் | 1 |
| 2 | ஆ | வேதி + உரங்கள் | 1 |
| 3 | அ | 3 ½ | 1 |
| 4 | ஈ | எல்லாம் | 1 |
| 5 | ஆ | பணி | 1 |
| 6 | அ | ஆய்தம் | 1 |
| 7 | ஆ | பறவைகள் இல்லாத உலகில் மனிதன் வாழ முடியாது. | 1 |
| 8 | ஈ | சேர்த்தல் | 1 |

## பகுதி – II – பிரிவு – 1
( மதிப்பெண்கள் : 8)

எவையேனும் நான்கு வினாக்களுக்கு விடை எழுதுக. 4 × 2 = 8

| வினா எண் | விடைக் குறிப்புகள் | மதிப்பெண் |
|---|---|---|
| 9 | அன்பு இல்லாதவர் எல்லாப் பொருளும் தமக்கே என்பார்கள். அன்பு உடையவர்கள் தம் உடம்பும் பிறர்க்கே என்பார்கள். | 2 |
| 10 | உணவு, இருப்பிடம், தட்பவெப்பநிலை மாற்றம், இனப்பெருக்கம் இவற்றிற்காகவே பறவைகள் இடம் பெயர்கின்றன.<br>நிலவு, விண்மீன், புவிஈர்ப்புப் புலம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டே பறவைகள் இடம் பெயர்கின்றன. | 2 |
| 11 | சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவகசிந்தாமணி, வளையாபதி, குண்டலகேசி<br>( எவையேனும் இரண்டு விடை எழுதியிருப்பின் மதிப்பெண் வழங்கலாம்) | 2 |
| 12 | தமிழ், பொய்யை அகற்றும் மொழி; அது மனத்தின் அறியாமையை நீக்கும் மொழி;<br>அன்புடைய பலரின் இன்பம் தரும் பாடல்கள் நிறைந்த மொழி; உயிர் போன்ற உண்மையை ஊட்டும் மொழி ; | 2 |

| | | |
|---|---|---|
| | உயர்ந்த அறத்தைத் தரும் மொழி. இந்த உலகம் சிறந்து வாழ்வதற்கான வழிகளையும் காட்டும் மொழி தமிழ்மொழி. | |
| 13 | நாளைய மனிதனோ விண்ணிலுள்ள கோள்களில் எல்லாம் நகரங்கள் அமைத்து வாழ்ந்திடுவான். அங்குச் சென்றுவர விண்வெளியிலும் பாதை அமைத்திடுவான். | 2 |
| 14 | இன்னாத கூறல் | 2 |

பகுதி – II – பிரிவு – 2

( மதிப்பெண்கள் : 12)

எவையேனும் ஆறு வினாக்களுக்கு விடை எழுதுக. $6 \times 2 = 12$

| வினா எண் | விடைக் குறிப்புகள் | மதிப்பெண் |
|---|---|---|
| 15 | உயிர் எழுத்துகள் – உயிர்மெய் எழுத்துகள்<br>குறில் – 1 மாத்திரை<br>நெடில் – 2 மாத்திரை<br>மெய் எழுத்துகள் – அரை மாத்திரை | 2 |
| 16 | பொருத்தமான விடையாய் இருப்பின் மதிப்பெண் வழங்கவும். | 2 |
| 17 | த, சொ<br>ஒ, எ | 1<br>1 |
| 18 | கலைச்சொல்<br>அ. Sanctuary – புகலிடம்<br>ஆ. App – செயலி | <br>1<br>1 |
| 19 | தெளித்தல்,தெளிவு,தெளிதல்....<br>(எவையேனும் இரண்டு விடை எழுதியிருப்பின் மதிப்பெண் வழங்கலாம்) | 2 |
| 20 | பெரியர்,<br>செய்கலா | 1<br>1 |
| 21 | பல நாள்களாக மழை பெய்யவில்லை. பயிர்கள் வாடின. | 2 |
| 22 | அம்மா,<br>ஊஞ்சல்.....<br>( எவையேனும் இரண்டு விடை எழுதியிருப்பின் மதிப்பெண் வழங்கலாம்) | 1<br>1 |

பகுதி – III

( மதிப்பெண்கள் : 5)

அடிபிறழாமல் எழுதுக. 2+ 3 = 5

| வினா எண் | விடைக் குறிப்புகள் | மதிப்பெண் |
|---|---|---|
| 23 | அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார் என்பும் உரியர் பிறர்க்கு. | 2 |

www.Padasalai.Net

| | | |
|---|---|---|
| 24 | அ) தமிழுக்கு நிலவென்று பேர்! – இன்பத்<br>தமிழ் எங்கள் சமூகத்தின் விளைவுக்கு நீர்! *<br>தமிழுக்கு மணமென்று பேர்! – இன்பத்<br>தமிழ் எங்கள் வாழ்வுக்கு நிருமித்த ஊர்!.<br>(அல்லது)<br>ஆ) மாமழை போற்றுதும் மாமழை போற்றுதும்<br>நாம நீர் வேலி உலகிற்கு அவன் அளிபோல்<br>மேல்நின்று தான் சுரத்தலான்* | 3 |

பகுதி IV

( மதிப்பெண்கள் : 9)

எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடை எழுதுக. 3x3 = 9

| வினா எண் | விடைக் குறிப்புகள் | மதிப்பெண் |
|---|---|---|
| 25 | ✓ தமிழ் இலக்கியங்கள் இனிமையானவை.<br>✓ ஓசை இனிமை, சொல் இனிமை, பொருள் இனிமை கொண்டவை.<br>பல மொழிகள் கற்ற கவிஞர் பாரதியார்,<br>யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழி போல்<br>இனிதாவது எங்கும் காணோம்<br>என்று தமிழ்மொழியின் இனிமையை வியந்து பாடுகிறார். | 3 |
| 26 | ✓ காணி அளவு நிலம் வேண்டும். அங்கு ஒரு மாளிகை கட்டித்தர வேண்டும். அழகான தூண்களையும் தூய நிறமுடைய மாடங்களையும் அது கொண்டிருக்கவேண்டும்.<br>✓ நல்ல நீரையுடைய கிணறும் அங்கே இருக்க வேண்டும்.<br>✓ இளநீரும் கீற்றும் தரும் தென்னைமரங்கள் வேண்டும்.<br>✓ அங்கே முத்து போன்ற நிலவொளி வீச வேண்டும். காதுக்கு இனிய குயிலின் குரலோசை கேட்க வேண்டும்.<br>✓ உள்ளம் மகிழுமாறு இளந்தென்றல் தவழ வேண்டும். | 3 |
| 27 | ✓ எந்திரமனிதர்கள், உணவகங்களில் உணவு ப ரிமாறுகின்றனர்.<br>பொது இடங்களில் வழிகாட்டுகின்றனர்.<br>வெடிகுண்டுகளைச் செயலிழக்கச் செய்கின்றனர். | 3 |
| 28 | ✓ பணிவும் இன்சொல்லுமே ஒருவருக்கு மிகச்சிறந்த அணிகலன்கள் ஆகும்.மற்றவை அணிகலன்கள் ஆகா. | 3 |

www.Padasalai.Net

| | | |
|---|---|---|
| | ✓ இனிய சொல் இருக்கும்போது இன்னாச்சொல் பேசுவது கனி இருக்கும்போது காயை உண்பதைப் போன்றது | |
| 29 | அ) மொழி சிந்திக்கவும் சிந்தித்ததை வெளிப்படுத்தவும் பிறர் கருத்தை அறியவும் உதவுகிறது.<br>ஆ) பேச்சு வடிவம், எழுத்து வடிவம்<br>இ) மொழி | 1<br>1<br>1 |

பகுதி V

(மதிப்பெண்கள் : 6) 1x6=6

| வினா எண் | விடைக் குறிப்புகள் | மதிப்பெண் |
|---|---|---|
| 30 | அ) விடுப்பு விண்ணப்பம்.<br>அனுப்புநர்<br>பெறுநர்<br>விளித்தல், பொருள்<br>கடிதச்செய்தி<br>ஒப்பம்<br>இடம் நாள்<br>(அல்லது )<br>ஆ) இயற்கையைக் காப்போம்<br>முன்னுரை<br>உட்தலைப்புகள்<br>முடிவுரை | 1<br>1<br>1<br>1<br>1<br>1<br>2<br>2<br>2 |

பகுதி VI

( மதிப்பெண்கள் : 12) 2x6=12

| வினா எண் | விடைக் குறிப்புகள் | மதிப்பெண் |
|---|---|---|
| 31 | அ) ஆக்கப்பூர்வமான பயன்பாடுகளாகவும் புதிய சிந்தனையாகவும் இருப்பின் தக்க மதிப்பெண் வழங்கலாம்.<br>(அல்லது)<br>✓ தமிழ்மொழி பேசவும் படிக்கவும் எழுதவும் உகந்த மொழி.உயிரும் மெய்யும் இணைவதால் தோன்றுபவை உயிர்மெய் எழுத்துகள். உயிர் எழுத்துகள், மெய் எழுத்துகள் ஆகியவற்றின் ஒலிப்பு முறைகளை அறிந்து கொண்டால் | 6<br>2<br>2 |

www.Padasalai.Net

| | | |
|---|---|---|
| | உயிர்மெய் எழுத்துகளை எளிதாக ஒலிக்கலாம்.<br>✓ எழுத்துகளைக் கூட்டி ஒலித்தாலே தமிழ் படித்தல் இயல்பாக நிகழ்ந்துவிடும்.<br>✓ (எ.கா.) அ + மு + து = அமுது.<br>✓ தமிழ்மொழியை எழுதும் முறையும் மிக எளிதுதான். இதற்கேற்ப, தமிழ் எழுத்துகள் பெரும்பாலும் வலஞ்சுழி எழுத்துகளாகவே அமைந்துள்ளன.<br>✓ (எ.கா.) வலஞ்சுழி எழுத்துகள் – அ, எ, ஔ, ண, ஞ<br>இடஞ்சுழி எழுத்துகள் – ட , ய, ழ | 2 |
| 32 | அ) கிழவனும் கடலும்<br>இயற்கைக்கும் மனிதனுக்கும் இடையே நடக்கும் போராட்டமே இந்தக் கதை.<br>சாண்டியாகோ என்பவர் வயது முதிர்ந்த மீனவர். அவர் கடலுக்குச் சென்றால் மீன் இல்லாமல், திரும்ப மாட்டார். ஆனால் கடந்த எண்பத்து நான்கு நாள்களாக ஏனோ அவருக்கு ஒரு மீனும் கிடைக்கவில்லை . மனோலின் என்னும் சிறுவன் மீன் பிடிக்கக் கற்றுக் கொள்வதற்காக முதல் நாற்பது நாள்களும் அவருடன் கடலுக்கு வந்தான். அவன் அவருக்கு வேண்டிய உதவிகள் செய்ததோடு பேச்சுத் துணையாகவும் இருந்தான். அவரோடு கடலுக்குச் சென்றால் ஒரு மீனும் கிடைப்பதில்லை என்று அவனை அவனது பெற்றோர், வேறு படகிற்கு அனுப்பிவிட்டனர். இப்பொழுதல்லாம் சாண்டியாகோ தனியாகவே மீன் பிடிக்கச் செல்கிறார்.<br>எண்பத்தைந்தாவது நாள் தனக்கு மீன்கள் கிடைக்கவே கிடைக்காது என்று எல்லாரும் சொல்கிறார்கள். அதை எப்படியாவது மாற்றிக் காட்ட வேண்டும் என எண்ணியபடி கடலில் தூண்டிலைப் போட்டுவிட்டுக் காத்துக் கொண்டிருந்தார். தூண்டிலில் சூரைமீனை மாட்டி வைத்திருந்தார். இரவு முழுவதும் காத்திருந்தார். மறுநாள் காலையிலும் மீன் இல்லாமல் திரும்பப் போவதில்லை என்ற முடிவுடன் இருந்தார்.<br>மதிய வேளையில் தூண்டில் கயிற்றை ஏதோ இழுப்பது போல் தெரிந்தது. மீன்தான் வந்திருக்கும் என நினைத்து மகிழ்ந்தார். தூண்டிலில் சிக்கிய மீன், தூண்டிலை வேகமாக இழுத்தது. சாண்டியாகோவும் விடாமல் இழுக்கிறார். மீனோ சாண்டியாகோவைக் கடலுக்குள் இழுத்துத் தள்ளிவிடுவது போல் இழுத்தது. இப்படியாக நாலுமணி நேரம் போராட்டத்திற்குப் பிறகு | 1<br>1<br>1<br>1<br>1<br>1<br>6 |

www.Padasalai.Net

| | | |
|---|---|---|
| | களைத்துப் போய் சற்று கண்ணயர்ந்து விட்டார் சாண்டியாகோ.<br>மீன், மீண்டும் தூண்டிலை இழுத்தபோது சாண்டியாகோவின் உறக்கம் கலைந்தது. மீண்டும் சுறுசுறுப்பாக தூண்டிலை இழுத்தார். நீண்ட நேரம் போராடி ஒருவழியாக மீனைப் பிடிக்க முடியாமல் அதனை ஈட்டியில் குத்திக் கொன்று விடுகிறார். பிறகு பெரிய மீனாக இருந்ததனால் படகுக்குள் போட இயலாமல் படகின் பக்கவாட்டில் இழுத்துக் கட்டினார். தன்னுடைய விடாமுயற்சியின் பயனை உணர்ந்தார். படகைக் கரையை நோக்கிச் செலுத்தினார். அப்போது சுறாமீன்கள் இவர் படகில் கட்டி வைக்க மீனைச் சாப்பிடுவதற்காகச் சூழ்ந்தன. அவற்றைத் தன் ஈட்டியால் வீழ்த்தினார்.<br>ஒரு வழியாகக் கரை சேர்ந்தார். இன்று நடந்த எல்லாவற்றையும் மனோலினுக்குச் சொல்ல வேண்டும் என்று எண்ணியபடி படகை இழுத்துக் கட்டினார். பிறகு படகோடு கட்டிய மீனைப் பார்த்தார். அது சுறாமீன்களால் உண்ணப்பட்டு அதன் தலையும் எலும்பும் தாம் மிஞ்சியிருந்தன.<br>சாண்டியாகோவைப் பார்க்க மனோலின் வந்தான். "அடேயப்பா! எவ்வளவு பெரிய மீன் அது! மீன் பிடிப்பதில் பெரிய வீரன் தாத்தா நீ!" என்றான் மனோலின். கிழவர் "நான் பிடித்த மீனைப் பார்த்தாயா?" கடைசியில் எலும்பும் தலையும்தான் மிச்சம்!" என்றார். மனோலின் "அதனால் என்ன தாத்தா? உன் திறமையும் விடாமுயற்சியும் வென்றுவிட்டதே! . இனி உன்னை யாரும் பழித்துப் பேச முடியாது தாத்தா! உன்னிடம் கற்றுக் கொள்ள வேண்டியது நிறைய இருக்கிறது. இனி நான் உன்னோடுதான் மீன் பிடிக்க வருவேன்" என்று கூறினான். இக்கதை மூலம் நாம் உணர்வது 'விடாமுயற்சி வெற்றியைத் தரும்' என்பதாகும்.<br>(அல்லது)<br>'கனவு பலித்தது' – கடிதக் கருத்துகள் :<br>ஆறாம் வகுப்பு படிக்கும் போதே அறிவியல் துறையில் பணியாற்ற வேண்டும் என்ற விருப்பம் கொண்டிருந்தாள். அவ்விருப்பம் நிறைவேறியது. ஆம் அவள் சதீஷ் தவான் விண்வெளி ஆராய்ச்சி நிறுவனத்தில் இளம் ஆராய்ச்சியாளர் பணிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டாள். இன்சுவை அரசுப் பள்ளியில் தமிழ் வழியில் படித்ததனால் தன் இலக்கை அடைவது கடினமானது என எண்ணினாள். ஆனால் | |

| | | | |
|---|---|---|---|
| | அவளுடைய அத்தையின் ஊக்குவிப்பினால் தன் இலக்கை அடைந்தாள்.<br>சாதனை புரிவதற்கு மொழி தடை இல்லை. கணிதமேதை இராமானுஜம். மேனாள் குடியரசுத் தலைவர் மேதகு அப்துல்கலாம், மயில்சாமி அண்ணாதுரை, இஸ்ரோவின் தலைவர் சிவன், இஸ்ரோ அறிவியல் அறிஞர் வளர்மதி போன்றோர் தம் தாய்மொழித் தமிழில் பயின்ற சாதனையாளர்களாவர்.<br>நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் என்னும் ஐந்தும் கலந்ததுதான் உலகம் என்பது அறிவியல் உண்மை. இக்கருத்தினைத் தொல்காப்பியரும் தமது தொல்காப்பியத்தில் குறிப்பிட்டுள்ளார். 'நிலம், தீ, நீர், வளி, விசும்போடு ஐந்தும் கலந்த மயக்கம் உலகம் ஆதலின்' மேலும், உலக உயிர்களை ஓரறிவு முதல் ஆறறிவு வரை வகைப்படுத்தியுள்ளனர்.கடல்நீர் ஆவியாகி மேகமாகிப் பின்னர் குளிர்ந்து மழையாகப் பொழியும் என்ற அறிவியல் உண்மையைப் பழந்தமிழ் இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. அவை<br>கார் நாற்பது : 'கடல்நீர் முகந்த கமஞ்சூழ் எழிலி......'<br>அறுவை மருத்துவம் :<br>போரில் புண்பட்ட வீரரின் மார்பை வெண்ணிற ஊசியால் தைத்த செய்தி பதிற்றுப்பத்து என்னும் நூலில் இடம் பெற்றுள்ளது. நெடு வெள்ளூசி நெடு வசி பரந்த வடு'. சுறாமீன் தாக்கியதால் ஏற்பட்ட புண்ணை நரம்பினால் தைத்த செய்தி நற்றிணை என்னும் நூலில் இடம் பெற்றுள்ளது.<br>(பொருத்தமான விடை எழுதியிருப்பின் முழு மதிப்பெண் வழங்கலாம்) | |